# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1405/3 - 2005 අගෝස්තු 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2005.08.11

*1405/3 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 11/80* (ii)

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
சுகாதார பராமரிப்பு போஷணை மற்றும்
ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2005, ஓகத்து 05.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் உணவு (உப்புடன் அயடின் கலத்தல்) ஒழுங்குவிதிகள் – 2005 என எடுத்துக்காட்டப் படலாம் என்பதுடன், அவை 2005 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. அயடின் கலந்த உண்ணத்தகு கறி உப்பானது சாதாரண உப்பிலுள்ள அதனது மாசுக்களைக் கழுவுவதன மூலம் அகற்றிவிட்டு அதற்குப் பொற்றாசியம் அயடைட்டை, பொற்றாசியம் அயடேற்றை அல்லது கல்சியம் அயடேற்றைச் சேர்ப்பதன் மூலம் பெற்ற, உலர்ந்த பொருள் அடிப்படையில் நிறையில் தொண்ணூற்றேழு சதவீதத்திற்குக் (97%) குறையாத அளவு சோடியம் குளோரைட்டைக் கொண்டுள்ள சாதாரண உப்பு வடிவத்திலானதாக இருத்தல் வேண்டும் ;

ஆயினும், எவ்வாறாயினும் உப்பில் அயடின் கலப்பதற்காகப் பொற்றாசியம் அயடைட்டுப் பயன்படுத்தப்பட்டிருப்பின், அதற்குப் பொருத்தமான சமநிலைப்படுத்தும் பதார்த்தமானது பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

3. அயடின் கலந்த உண்ணத்தகு கறி உப்பானது ஒன்றில் குறுணல் வடிவத்திலோ அல்லது தூள் வடிவத்திலோ உள்ள படிகவுருவான திண்மங்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன், களிமண், கழிவுக்கல், சிப்பிகள் மற்றும் வேறு வெளிப்புறப் பொருட்கள் போன்ற கட்புலனாகக் கூடிய மாசுக்கள் இல்லாததும் வெள்ளை நிறமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

4. அயடின் கலந்த உண்ணத்தகு குறுணல் வடிவ கறி உப்பில் நிறைப்படி எண்பது (80%) சதவீதமானவை 4.75 மி.மி. (பீ எஸ்-4) உடைய துவாரமொன்றினூடாக ஊடு செலுத்தப்படக்கூடிய திறனைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

5. அயடின் கலந்த உண்ணத்தகு கறி உப்பானது பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய உப்பிலுள்ள ஈரலிப்பு மட்டமானது, நிறைப்படி ஆறு சதவீதத்திற்குக் (6%) குறைவானதாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) உலர் அடிப்படையில் நீரில் கரையத்தகாத பொருட்கள் நிறைப்படி அரைச் சதவீதத்திற்கு (0.5%) குறைவானதாக இருத்தல் வேண்டும் ;

(இ) உலர் அடிப்படையில் சோடியம் குளோரைட்டின் (NaCl) உள்ளடக்கமானது நிறைப்படி, தொண்ணூற்றேழு சத வீதத்திற்குக் (97%) குறையாமல் இருத்தல் வேண்டும் ;

(ஈ) உலர் அடிப்படையில் சோடியம் குளோரைட்டு அல்லாத நீரில் கரையத்தகு பொருட்கள் நிறைப்படி இரண்டு சதவீதத்திற்கு (2%) குறைவானதாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(உ) உலர் அடிப்படையில் உப்பிலுள்ள அயடீனின் (I) உள்ளடக்கமானது நிறைப்படி ஒரு கிலோ கிராம் உப்புக்கு பதினைந்து மில்லி கிராம்களுக்கு (15 மி. கி.) குறையாததாகவும் மற்றும் முப்பது மில்லி கிராம்களுக்கு (30 மி. கி.) கூடாததாகவும் இருத்தல் வேண்டும்.

6. அயடீன் கலந்த உண்ணத்தகு கறி உப்பானது ஒளி புகக்கூடிய கொள்கலனில் பொதி செய்யப்படுதல் வேண்டும். பொதி செய்யும் பொருள் பொலித்தீன் ஆக இருக்கும்போது, அத்தகைய பொதி செய்யும் பொருளின் தடிப்பமானது 75 மைக்ரோ மீட்டரை விடக் குறைவானதாக இருத்தலாகாது :

ஆயின் எவ்வாறாயினும், மேசையில் வைத்துத் தெளிப்பான்களாகப் பயன்படுத்தப்படும் உணவோடு சேர்ப்பதற்காகக் கொள்கலனில் உள்ள சுயாதீனமாகச் செல்லக்கூடிய தூள் வடிவ அயடின் கலந்த கறி உப்புக்கு இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

7. (அ) அயடீன் கலந்த உண்ணத்தகு கறி உப்பைக்கொண்டுள்ள பொதியானது, 2005.01.19 ஆந் தேதிய 1376/9 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத் துண்டு இடலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகச் சுட்டுத்துண்டு இடப்படுதல் வேண்டும்.

(ஆ) அயடீன் கலந்த உண்ணத்தகு கறியுப்பைக் கொண்டுள்ள ஏதேனும் பொதியின் சுட்டுத் துண்டில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளுள், எவையேனும் இரண்டு மொழிகளில் :-

(i) உற்பத்திப் பொருளின் பொதுப் பெயராக "அயடீன் கலந்த உண்ணத்தகு கறியுப்பு"அல்லது அயடேற்றுக் கலக்கப்பட்ட உண்ணத்தகு கறியுப்பு" ;

(ii) "கழுவாமல் உபயோகிக்கவும்" ;

(iii) "வெப்பமான மற்றும் சூரிய வெளிச்சமுடைய இடங்களில் வைக்க வேண்டாம்",

என்ற சொற்கள் எழுதப்பட்டோ அல்லது அச்சடிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

8. (1) ஆளெவரும். உணவின் ஆக்கக் கூறு ஒன்றாகப் பாவித்தலும் மற்றும் உணவு உற்பத்தியும் உட்பட, மனித நுகர்வு நோக்கத்திற்காக அயடீன் கலந்த அல்லது அயடேற்றுக் கலந்த கறியுப்புத் தவிர்ந்த வேறு ஏதேனும் உண்ணத்தகு கறியுப்பை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனைக்காகக் களஞ்சியப்படுத்துதல், விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், வெளிக்காட்டி வைத்தல் அல்லது திறந்து வைத்தல், கொண்டு செல்லுதல் அல்லது விநியோகித்தல் ஆகாது :

ஆயினும் எவ்வாறாயினும், இந்த ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் பிரதான உணவு அதிகாரியிடம் அத்தகைய தொழிற்சாலை பதிவு செய்யப்பட்டதன் பின்னர் பிரதான உணவு அதிகாரியினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ்க் கைத்தொழில் நோக்கங்களுக்காகக் கறி உப்பைப் பயன்படுத்துவதற்கு ஏற்புடையதாதலாகாது.

9. எட்டாம் ஒழுங்குவிதியின் கீழான அனுமதிப்பத்திரமென்றுக்கான விண்ணப்பமொன்று இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் கொடுக்கப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

10. ஒன்பதாம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று பொருளளவில் இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும்.

11. 1993 ஆம் ஆண்டு ஒற்றோபர் 14 ஆந் திகதியிடப்பட்ட 788/ 7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1993 ஆம் ஆண்டின் உணவு (உப்புடன் அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 9)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
(பிரதான உணவு அதிகாரி)
சுகாதார சேவைகள் திணைக்களம்,
385, வண. பத்தேகம விமலவன்ச மாவத்தை,
கொழும்பு 10.

### கைத்தொழில் பாவனைக்காக கறி உப்பைக் கொள்வனவு செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் கொண்டு செல்லுதல் என்பவற்றிற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :-----.

2. முகவரி :-----.

3. தொழிற்சாலையின் பெயர்/வகை :-----.

4. வியாபாரப் பதிவு இல. :-----.
(பதிவுச் சான்றிதழின் ஒளிப்படப் பிரதியை இணைக்கவும்)

5. உற்பத்தி செய்யப்படும் பொருளின் பெயர் :-----.
(உதா. அயடின் சேர்க்கப்பட்ட உப்பு/வேறு)

6. உற்பத்திப் பொருளின் ஆக்கக் கூறாகப் பயன்படுத்தப்படும் கறி உப்பின் நூற்று வீதம் :-----.

7. அயடீன் கலந்த கறி உப்பு ஏன் பயன்படுத்தப்படக்கூடாது அல்லது பயன்படுத்துவதற்கான தேவையில்லை என்பதற்கான காரணங்கள் :-----.
(அயடின் சேர்க்கப்பட்ட உப்பு தவிர்ந்த ஏனையவை தயாரிக்கும்போது)

8. விண்ணப்பிக்கும் அளவு :-----.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும் :**

**உணவு, மருந்துப் பரிசோதகரின் சான்றிதழ்**

1. விண்ணப்பகாரரினால் மேற்படி தொழிற்சாலை நடாத்தப்படும் வளவுகளுக்குச் சென்று முறையாகச் சோதனை செய்துள்ளதுடன் அவரது வெளிப்படுத்துதல்களைச் சரிபார்த்துள்ளேன்.

2. விண்ணப்பகாரரினால் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் சரியானவையும், உண்மையானவையுமாகும்.

3. விண்ணப்பகாரரினால் கோரப்பட்டுள்ள ....................... கி. கி. கறி உப்பு ............................... மாதங்களுக்கு அவரது தொழிற்சாலையை வெற்றிகரமாக இயக்குவதற்குத் தேவையானதாகும்.

குறிப்புக்கள் :-----.

திகதி :-----.

................................................
உணவு, மருந்துப் பரிசோதகர்
அலுவலக முத்திரை

உதவிப் பணிப்பாளரின் விதப்புரை
(உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகப் பிரிவு)

விதந்துரைக்கப்படுகிறது/விதந்துரைக்கப்படவில்லை

................................................
உதவிப் பணிப்பாளர்,
(உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகப் பிரிவு)

திகதி :-----.

பணிப்பாளரின் அங்கீகாரம்
(சுற்றாடல், தொழில் சுகாதாரம்)

அங்கீகரிக்கப்பட்டது/அங்கீகரிக்கப்படவில்லை

........................................................
பணிப்பாளர்,
(சுற்றாடல், தொழில் சுகாதாரம்)

திகதி :-----.

## அட்டவணை II

(ஒழுங்கு விதி 10)

### தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு கறி உப்பை கொள்வனவு செய்வதற்கும்/ இறக்குமதி செய்வதற்கும் மற்றும் கொண்டு செல்லுவதற்கான அனுமதிப்பத்திரம்

.................................................................... இல் வதியும் ...................................................... இலக்க தேசிய அடையாள அட்டையைக் கொண்டுள்ள திரு./திருமதி/செல்வி ........................................................................................................................ என்பவர் ........................................................ இல் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு ..................................................... கி. கி. கறி உப்பைப் பாவிப்பதற்கு/ கொள்வனவு செய்வதற்கு/ இறக்குமதி செய்வதற்கு/ கொண்டுசெல்லுதற்கு/ களஞ்சியப்படுத்துவதற்கு 2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதிய 1405/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட உணவு (அயடீன் கலத்தல்) ஒழுங்குவிதிகள் 2005 இன் பிரகாரம் அனுமதி அளிக்கப்படுகின்றது.

.......................................................
பணிப்பாளர்,
சுற்றாடல், தொழில் சுகாதாரம்.
(பிரதான உணவு அதிகாரிக்காக)

திகதி :-----.

**குறிப்பு :-** (1) இவ் அனுமதிப்பத்திரமானது, அனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்ட உப்பின் தொகை ஒன்றை மட்டும் கொள்வனவு செய்வதற்கும்/ இறக்குமதி செய்வதற்கும்/ கொண்டுசெல்வதற்கும்/ களஞ்சியப்படுத்துவதற்கும் செல்லுபடியானதாகும். உப்பை வழங்குகின்ற எவரேனும் உற்பத்தியாளர், இவ்வனுமதிப்பத்திரத்தில், அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட உப்பின் அளவை அழிக்க முடியாதமையினால் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் விடயத்தில், அனுமதிப்பத்திரத்தை சரிபார்ப்பதற்காகவும் மற்றும் புறக்குறிப்பிடுவதற்காகவும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுகளைப் பரிசோதனை செய்யும் அலகிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) கொள்வனவு செய்யப்பட்ட/ இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் தொகையானது சொல்லப்பட்ட திகதி அன்று கொண்டுசெல்லப்படாதுவிட்டால், அந்தப் பயனைக் கொண்டுள்ள புறக்குறிப்பானது உப்பை வழங்குகின்ற அமைப்பினால் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உப்பின் விடயத்தில், இறக்குமதி செய்யப்பட்ட உணவைப் பரிசோதனை செய்யும் அலகின் உத்தியோகத்தரினால் உரிய அனுமதிப்பத்திரத்தின்மீது செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய புறக்குறிப்பைக் கொண்டிருக்காத அனுமதிப்பத்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்ட அல்லது துறைமுகத்திலிருந்து அகற்றப்பட்ட நாள் தவிர்ந்த வேறு நாட்களில் உப்பை கொண்டு செல்வதற்கு வலிதுடையதாக இருக்காது.

*8-884*